# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை 47-ல் கி.மீ. 100 + 100 (செங்கப்பள்ளி) முதல் 182 + 400 (வாளையார்) வரை நான்கு/ ஆறு வழி சாலையாக மாற்றும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டம் தொடர்பாக 02.02.2010 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கேட்புணரும் கூட்ட சுருக்க நடவடிக்கை விவரங்கள்.

| | | |
|---|---|---|
| தொழிற்திட்டத்தின் பெயர் | : | தேசிய நெடுஞ்சாலை 47-ல் கி.மீ. 100 + 100 (செங்கப்பள்ளி) முதல் 182 + 400 (வாளையார்) வரை நான்கு/ ஆறு வழி சாலையாக மாற்றும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டம் |
| நிகழ்விடம் | : | ஸ்ரீ அவினாசியப்பர் திருமண மண்டபம்<br>18-ஏ, கோவை மெயின் ரோடு, அவினாசி |
| தேதி மற்றும் நேரம் | : | 02.02.2010 முற்பகல் 11.00 மணி |

முன்னிலை

| | | |
|---|---|---|
| 1. திரு. கே.வி. முரளிதரன் | : | மாவட்ட வருவாய் அலுவலர்<br>திருப்பூர் மாவட்டம், திருப்பூர் |
| 2. திரு. இரா. கண்ணன் | : | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் |
| 3. திரு. பி. முத்துராமலிங்கம் | : | வட்டாட்சியர்<br>அவினாசி வட்டம், அவினாசி |
| 4. திரு. பி. காமராஜ் | : | துணை கண்காணிப்பாளர்<br>காவல் துறை, அவினாசி. |

திட்ட அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| 1. திரு. பி. மணிவண்ணன் | : | திட்ட இயக்குனர்<br>தேசிய நெடுஞ்சாலைத் துறை, கோவை |
| 2. திரு. வி. கோவிந்த ராகவன் | : | நில ஆர்ஜித அலுவலர்<br>தேசிய நெடுஞ்சாலைத் துறை, கோவை |

மேற்படி கருத்துக் கேட்டுணரும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் எண்ணிக்கை 222, அவர்களின் வருகைப் பதிவு இணைப்பு-1ல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர், திட்ட இயக்குனர் - தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களை வரவேற்று, அமையவிருக்கின்ற நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டம் பற்றி கீழ்கண்டவாறு பொதுமக்களுக்கு விவரித்தார்.

“சுற்றுச் சூழல் பாதிப்பு, தாக்கங்கள் மற்றும் எதிர்மறை தாக்கங்கள், அதை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் குறித்த சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தேசிய நெடுஞ்சாலைத் துறையால் தயாரிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த தேசிய நெடுஞ்சாலை 47 விரிவாக்கத்திட்டம் சம்பந்தமாக ஏற்கனவே கோயம்புத்தூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்காக 30.12.09 அன்று சூலூரில் பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டது. தற்சமயம் இக்கூட்டமானது திருப்பூர் மாவட்ட எல்லைப் பகுதிகளான செங்கப்பள்ளியிலிருந்து கிட்டாம்பாளையம் வரை உள்ள பகுதிகளுக்காக நடத்தப்படுகிறது. இத்திட்டம் சம்பந்தமான விரிவான விளக்கத்தினை தேசிய நெடுஞ்சாலைத் துறையின் ஆலோசகர்களான திருவாளர்கள். வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ் நிறுவனத்தினர் தெரிவிப்பார்கள். அதன்பின் பொதுமக்கள் இத்திட்டத்தின் சுற்றுச் சூழல் பாதிப்பு சம்பந்தமான தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும் கூறினார். மேலும், பொதுமக்களுக்கு அவர்களுடைய கருத்தை எழுத்துப் பூர்வமாக தெரிவிக்க பொதுமக்கள் கருத்து கணிப்பு படிவம் அனைவருக்கும் வழங்கப்பட இருக்கிறது. அதில் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்து அளிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

இந்த கூட்ட நிகழ்வானது குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்டும், புகைப்படங்கள் எடுக்கப்பட்டும், கூட்ட நடவடிக்கைகள் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டும் வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை, புது தில்லி அவர்களுக்கு தக்க நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.”

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளரின் அறிவிப்பிற்கு பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர் அவர்கள் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர், திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட உள்ளூர் பொது மக்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும், திட்ட இயக்குனர், நெடுஞ்சாலைத் துறை அவர்களை திட்டம் சம்பந்தமாக விரிவான விளக்கவுரை அளிக்குமாறும், அதற்கடுத்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ எழுத்துப் பூர்வமாகவோ தெரிவிக்கலாம் என்று கேட்டுக் கொண்டார்.

இதன்படி, தேசிய நெடுஞ்சாலைத் துறையின் திட்டம் சம்பந்தமான சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் அதை நிவர்த்தி செய்யும் முறைகள் சம்பந்தமாக அவர்களுடைய திட்ட ஆலோசகரான வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் முதுநிலை திட்ட அலுவலர் திருமதி.ஆர்.கண்மணி அவர்கள் கணினி திரைக்காட்சி மூலமாக விரிவாக கீழ்கண்டவாறு விவரித்தார்.

இத்திட்டமான தேசிய நெடுஞ்சாலை 47ன் விரிவாக்கம் (செங்கப்பள்ளியிலிருந்து வாளையார் வரை) சேலம் முதல் கன்னியாகுமரி வரையான தேசிய நெடுஞ்சாலை 47ன் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாகும். இந்த தேசிய நெடுஞ்சாலையானது கேரள மாநிலத்தை தமிழகத்துடன் இணைக்கும் மிக முக்கியமான சாலையாகும். இந்த விரிவாக்கத்திட்டமானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (1) செங்கப்பள்ளி முதல் எல் அண்டு டி புறவழிச் சாலை வரை (2) எல் அண்டு டி புறவழிச்சாலை துவக்கத்திலிருந்து முடிவு வரை (3) எல் அண்டு டி புறவழிச்சாலை முடிவிலிருந்து வாளையார் வரை. தற்சமயம் இயக்கத்தில் இருக்கும் தேசிய நெடுஞ்சாலை 47-ஆனது முறையாக திட்டமிடப்படாததாலும் வாகன போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் இத்திட்ட விரிவாக்கம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்தில் வாகனங்கள் 100 கி.மீ. வேகத்தில் செல்லும் அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இந்த தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழித் தடங்கள் போதுமானதாக உள்ளது. இருந்த போதும் வாகன விபத்து மற்றும் போக்குவரத்து வாகன நெரிசலைத் தவர்க்கும் பொருட்டும் 6 வழிச்சாலையாக திட்டமிடப்பட்டுள்ளது. இச்சாலையில் வாகன விபத்து மற்றும் வாகன நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தேசிய நெடுஞ்சாலைத்துறை தர நிர்ணயத்தின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் மொத்தமாக மூன்று புறவழிச்சாலைகள் அமைக்கப்பட உள்ளது. இதில் இரண்டு புறவழிச்சாலைகள் திருப்பூர் மாவட்ட எல்லைக்குள், அதாவது அவினாசியில் ஒன்றும் பெருமாநல்லூரில் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மொத்த நீளமான 82 கி.மீ. முழுவதும் சேவை சாலைகள் அமைக்கப்பட உள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் பெருமாநல்லூர் மற்றும் அவினாசியில் அமைய உள்ள புறவழிச்சாலைகளின் நீளம் தற்பொழுது உள்ள சாலைகளை விட அதிக தூரம் இல்லை. பெருமாநல்லூர் புறவழிச்சாலை பகுதியில் கிராமங்களுக்கான பாதிப்புகள் குறைவு. அவினாசி புறவழச்சாலையில் அவினாசியிலிருந்து வலது புறத்தை விட இடது புறம் அதாவது தென்புறம் அமைவதற்கே சாத்தியக் கூறுகள் அதிகம். சாலை சந்திப்புகள் மேம்படுத்தப்படும்.

இந்த தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டத்தின் தாக்கம் மற்றும் மேம்பாடு சம்பந்தமாக மண் மற்றும் நிலத்தடி நீரின் தர ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் பெருமாநல்லூர் பகுதியிலுள்ள நிலத்தடி நீரினைத் தவிர மற்ற இடங்களில் நிலத்தடி நீரின் தரம் நிர்ணய அளவுகளுக்குள் உள்ளது. காற்றின் தர நிர்ணய அளவுகளும் தேசிய தர நிர்ணய அளவுகளுக்குள் உள்ளது. ஒலி மாசின் அளவு பெருமாநல்லூர் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் தேசிய தர நிர்ணய அளவுகளுக்குள் உள்ளது. மேற்படி அதிகப்படியான மாசுகளைத் தவிர்க்கும் பொருட்டு தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்ட வழித்தடத்தில் வனவிலங்கு சரணாலயங்களோ, வழிபாட்டுத் தலங்களோ இல்லை. இருந்த போதிலும் பாதிப்பு இருப்பின் பொதுமக்களின் ஒப்புதலுடன் மாற்று ஏற்பாடுகள் செய்து தரப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் 1000 கோடி ரூபாய். திருப்பூர் மாவட்ட பகுதியில் இத்திட்டம் பொருட்டு 1300 மரங்கள் வெட்டப்பட உள்ளது. இதற்கு பதிலாக ஒரு மரத்திற்கு மூன்று மரம் வீதமாக மரங்கள் நடப்படும், மற்றும் சாலையின் நடுவில் முழுவதுமாக குற்றுச் செடிகள் வளர்க்கப்படும்.

இதற்கடுத்து மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், இத்திட்டம் சம்பந்தமான சுற்றுச் சூழல் தொடர்பாக பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ அல்லது இங்கே கொடுக்கப்பட்டுள்ள கருத்து கணிப்பு படிவத்தில் எழுத்து பூர்வமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**<u>பொதுமக்களின் கருத்துக்கள்</u>**

கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களில் 13 நபர்கள் வாய்மொழியாக தங்களது கருத்துக்களை கீழ்கண்டவாறு தெரிவித்தனர். அதற்கு திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்கள் அளித்த விளக்கமும் பின்வருமாறு.

**1. திரு. ஆறுமுகம், பழங்கரை**

இத்திட்ட பகுதியான பழங்கரையில் ஆற்றுப் பாதை மற்றும் கழிவு நீர் வடிகால் செல்கிறது. அவற்றிற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். விவசாயப் பகுதிகள் பாதிக்கப்படுகிறது. மின் கம்பங்கள் மற்றும் குடிநீர் வசதிகள் பாதிக்கப்படுகிறது. மற்ற படி இத்திட்டத்தால் அதிகமான மாசு ஏற்பட வாய்ப்பில்லை.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

மின்சார கம்பங்கள், குடிநீர் வசதி மற்றும் கழிவு நீர் வடிகால் வசதி மாற்றுதல் சம்பந்தமாக அந்தந்த துறைகளின் மூலம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**2. திரு. சாமிநாதன், வேலாயுதம்பாளையம்**

குறுக்குச் சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகளின் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகளை விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

இத்திட்டத்தின் மொத்த நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலையின் இரு பகுதிகளிலும் ஏழு மீட்டர் அகலத்திற்கு சேவை வழி அமைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

**3. திரு. அம்பலவாணன், தொழில் வர்த்தக சங்க செயலாளர், அவினாசி**

அவினாசி புறவழிச்சாலை அவினாசியின் வடபுறமாக அல்லது தென்புறமாக என்பது பற்றி திட்டம் ஆரம்பிப்பதற்கு முன் ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டு பொதுமக்கள் புறவழிச்சாலை வடக்கு புறமாக அமைக்குமாறு தெரிவித்தனர். ஆனால் தற்போது புறவழிச் சாலை அவினாசிக்கு தென்புறமாக அமைய இருக்கிறது. எனவே, அவினாசியின் புறவழிச்சாலையை வடக்கு புறமாக மாற்றி அமைக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

ஏற்கனவே நடத்தப்பட்ட பொதுமக்கள் ஆலோசனைக் கூட்டத்தில், ஒரு சாரார் அவினாசிக்கு வலது புறமாகவும் ஒரு சாரார் அவினாசிக்கு இடது புறமாகவும் புறவழிச் சாலையை அமைக்குமாறும் ஒரு சாரார் தற்சமயம் இயக்கத்தில் உள்ள நெடுஞ்சாலையையே விரிவாக்கம் செய்யுமாறும் வலியுறுத்தினர். மேற்படி பொதுமக்களின் கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டு மேற்படி வழித்தடத்தில் புறவழிச்சாலை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகளான செலவு, சாலை இணைப்பு மற்றும் போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவினாசியின் தெற்கு பகுதியில் புறவழிச்சாலை அமைப்பதே சிறந்தது என ஆணையத்தால் முடிவு செய்யப்பட்டது என்று தெரிவித்தார்.

**4. திரு. சாமிநாதன், ஒன்றியச் செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம், அவினாசி**

திட்டமானது முதலில் அவினாசியில் வடபுறமாக புறவழிச்சாலை அமைக்க திட்டமிடப்பட்டது. அது எப்படி தெற்கு புறமாக மாற ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. அவினாசி புறவழிச்சாலையின் நீளம் தெற்குப் புறத்தில் அமைவதற்கு அதிகம் ஆகும். மாண்புமிகு நெடுஞ்சாலை துறை அமைச்சர் புறவழிச்சாலையின் உண்மையான நீளத்தினை அளவிடுமாறு உத்திரவிட்டார். நெடுஞ்சாலைத் துறையால் அவினாசியில் வடக்கு புறமாக புறவழிச்சாலை அமைக்கும் பொருட்டு அதன் நீளம் 12.5 கி.மீ. என்பது தவறுதலாகும்.ம ஏற்கனவே நடத்தப்பட்ட பொதுமக்களின் ஆலோசனைக் கூட்டத்தில் 95 சதவிதிக பொதுமக்கள் வடக்கு புறம் அவினாசி புறவழிச்சாலை அமைக்குமாறு கூறினார்கள். இத்திட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் கருத்துகள் கேட்கப்படவில்லை.

இதற்கு மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்கள் குறுக்கிட்டு, ஏற்கனவே நடத்தப்பட்ட பொதுமக்கள் ஆலோசனைக் கூட்டமானது தேசிய நெடுஞ்சாலைத் துறையால் நடத்தப்பட்டது. தற்சமயம் நடத்தப்பட்டு வரும் கூட்டமானது சுற்றுச் சூழல் துறையின் அனுமதி பெறுவதற்காக சுற்றுச் சூழல் சம்பந்தமாக பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கும் பொருட்டு 2006-ஆம் வருடத்திய சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின்படி நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

அவினாசியில் புறவழிச்சாலை அமைப்பதின் சம்பந்தமாக மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மற்றும் திட்ட ஆலோசகர் திருவாளர்கள் வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ் நிறுவனத்திடமும் முன்னாள் மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடமும் ஆலோசிக்கப்பட்டு அவினாசியின் தெற்குப் புறமாக புறவழிச்சாலை அமைவதே

சிறந்தது என ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், அவினாசி புறவழிச்சாலைகளின் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு அவினாசியின் தெற்குப்புறமாக புறவழிச்சாலை அமைவதே சிறந்தது என ஆணையத்தால் முடிவு செய்யப்பட்டது என்று கூறினார்.

**5. திரு. ஆர். பாலசுப்பிரமணியம், கைகாட்டிபுதூர்**

தற்சமயம் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அதிகப்படியான விபத்துகள் நடைபெறுகின்றன. திட்ட விரிவாக்கம் முடிவடைவதற்கு இரண்டாண்டுகள் ஆகும். அதற்குள்ளாக தற்சமயம் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகளை தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

தற்சமயம் உள்ள நெடுஞ்சாலையில் விபத்துகளை தடுக்க தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நாங்களும் இது சம்பந்தமாக தேவையான உதவிகளை மேற்கொள்வோம் என்று கூறினார்.

**6. திரு. செந்தில்குமார், பழங்கரை ஊராட்சி மன்றத் தலைவர்**

இத்திட்டத்தால் ஏற்படும் நில இழப்பீட்டிற்கு அரசால் வகுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை விட அதிகப்படியான தொகை வழங்க வேண்டும்.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

நில ஆர்ஜித சட்டம் 1956-ன்படி சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் தற்சமயம் உள்ள நில மதிப்பின்படி நில இழப்பீட்டிற்கு மதிப்பீடு நிர்ணயம் செய்வார்கள். எனவே பொதுமக்கள் நில இழப்பீடு சம்பந்தமாக சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை தொடர்பு கொண்டு தங்களது நில இழப்பீட்டு மதிப்பை தெரிந்து கொள்ளலாம். இதில் பொதுமக்களுக்கு உடன்பாடு இல்லையெனில் நில ஆர்ஜித சட்டம் 1956-ன்படி நியமிக்கப்பட்ட ஆர்பிட்ரேட்டர் அவர்களிடம் முறையிடலாம். அதிலும் பொதுமக்களுக்கு உடன்பாடு இல்லையெனில் அவர்கள் உயர்நீதி மன்றத்தை அணுகலாம்.

**7. திரு. சண்முகம், அவினாசி ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சி,**

இந்த தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திட்டம் முடிவடைய நான்கு வருடங்கள் ஆகும். ஏற்கனவே இருக்கும் தேசிய நெடுஞ்சாலையில் அவினாசியில் வாகன நெரிசல் மிகுதியாக உள்ளது. இது சம்பந்தமாக அவினாசியில் ஏற்கனவே உள்ள தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கு மரங்களை வெட்டுவதற்கு காவல் துறை அனுமதி பெறப்படவில்லை.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

காவல் துறை அனுமதி கேட்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக குறிப்புகள் கிடைக்கப் பெற்றபின் உரிய அனுமதி வாங்கப்பட்டு விடும்.

**8. திரு. ஆர். பழனிசாமி, கம்யூனிஸ்ட் கட்சி, அவினாசி**

சேவை சாலைகளின் அகலம் திட்டமிடப்பட்ட 60 மீட்டர் அகலத்திற்குள் இரு புறமும் அடங்குமா அல்லது தனியாக சேவை சாலைகள் அமைக்கப்படுமா என்பது பற்றிய விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் அவினாசிக்கு அருகில் ஒரு மேம்பாலம் அமைக்குமாறும் நில இழப்பீட்டிற்கு அதிகப்படியான நிவாரணத் தொகை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

சேவை சாலைகளின் அகலம் இருபுறமும் 7 மீட்டர் அளவிற்கு திட்டமிடப்பட்ட நெடுஞ்சாலை விரிவாக்கமான 60 மீட்டர் அகலத்திற்குள் அடங்கும்.

**9. திரு. ராஜகோபால், விவசாயி, தெக்கலூர்**

இந்த தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டமானது 10 வருடங்களுக்கு முன்பே வந்திருக்க வேண்டும். பம்பாய் போன்ற பகுதிகளில் இருப்பது போல் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டத்தில் நமது பகுதிகளுக்கும் வசதிகள் செய்து தரப்பட வேண்டும். இத்திட்டத்தினால் விவசாய பூமிகள் பாதிக்கப்படும். அவினாசிக்கு வடக்கே புறவழிச்சாலைகள் அமைக்கப்படும் பட்சத்தில் அப்பகுதியிலுள்ள கிராமங்கள் வளர்ச்சி அடையும். அவினாசிக்கு தெற்கே புறவழிச்சாலைகள் அமைக்கப்படும் பட்சத்தில் அப்பகுதியிலுள்ள விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படும். அவினாசியில் சாலையை ஒட்டி அமைந்துள்ள விளம்பரத் தட்டிகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். விவசாய நிலங்களை ஆக்ரமிப்பு செய்வதில் ஒரு சாராருடைய விவசாய நிலங்களே அதிகப்படியாக ஆக்ரமிப்பு செய்யப்படுகின்றது. நில இழப்பீட்டிற்கு உரிய விலை நிர்ணயம் செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

**10. திரு. V.K. சந்திரமூர்த்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக ஒன்றிய செயலாளர், பெருமாநல்லூர்.**

பெருமாநல்லூரில் புறவழிச்சாலை அமைப்பதை விட ஏற்கனவே இருக்கும் தேசிய நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்யலாம். பெருமாநல்லூரில் புறவழிச்சாலை அமைவதற்கு அதிக தூரம் ஆகும். மற்றும் புறவழிச்சாலையினால் சுமார் 250 வீடுகளும் 80 ஏக்கர் விவசாய நிலங்களும் பாதிக்கப்படும். பெருமாநல்லூரில் ஏற்கனவே இருக்கும் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகிலேயே அரசு புறம்போக்கு நிலங்கள் இருப்பதால் புறவழிச்சாலையை தவிர்த்து ஏற்கனவே இருக்கும் தேசிய நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்யலாம். மேலும், இத்திட்டம் சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

பெருமாநல்லூரில் ஏற்கனவே இருக்கும் தேசிய நெடுஞ்சாலையின் நீளம் 4.24 கி.மீ. இதில் புறவழிச்சாலை அமைக்கும் பட்சத்தில் அதன் நீளம் 4.74 கி.மீ. எனவே இதில் அதிக வித்தியாசம் இல்லை. மேலும், புறவழிச்சாலையின் நீளம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அரசு அதை அனுமதிக்காது. பெருமாநல்லூரில் ஏற்கனவே உள்ள தேசிய நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்வதற்கான புவியியல் அமைப்பு சரியாக அமையவில்லை.

<u>மாவட்ட சுற்றுச் சூழல்பொறியாளர் அவர்களின் விளக்கம்</u>

இத்திட்டம் சம்பந்தமாக ஏற்கனவே முப்பது நாட்களுக்கு முன்னர் 25.12.2009 அன்று முக்கிய தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் பொதுமக்கள் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

**11. திரு. ராதாகிருஷ்ணன், AITUC.**

நில ஆர்ஜியத்திற்கான இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். பெருமாநல்லூர் புறவழிச்சாலை அமைவதால் அப்பகுதியில் வணிகர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த புறவழிச்சாலையில் கடைகள் அமைப்பதற்கு பாதிக்கப்பட்ட வணிகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இந்தியாவின் வடபகுதியில் இந்த வகையான திட்டங்களுக்கு இழப்பீட்டுத் தொகை அதிகமாக வழங்கியிருக்கிறார்கள். அதே போல் இத்திட்டத்திலும் இழப்பீட்டுத் தொகை அதிகப்படியாக வழங்கப்பட வேண்டும்.

**12. திரு. சண்முகம், கைகாட்டிபுதூர் மற்றும் திருமதி. கவிதா**

தேசிய நெடுஞ்சாலைத் துறை விரிவாக்கம் சம்பந்தமான திட்டங்களில் சுற்றுச் சூழல் அதிகமாக மாசுபடுவதற்குண்டான வாய்ப்புகள் குறைவு. இவ்வகையான திட்டங்களில் நில ஆர்ஜிதம் செய்வது மற்றும் நில இழப்பீடு தொகை வழங்குவது போன்றவைதான் அதிக முக்கியமானது. எனவே, நில இழப்பீட்டிற்கு அதிகப்படியான இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் விளக்கம்</u>

நில இழப்பீட்டிற்கு அதிக இழப்பீட்டு தொகை வழங்குவது சம்பந்தமாக தனியாக ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு அதில் இதைப்பற்றி விவாதிக்க இருக்கிறோம். மேலும், அதிகப்படியான இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு உரிய வழிமுறையின் மூலம் பொதுமக்கள் அணுக வேண்டும். இழப்பீட்டுத் தொகையானது நில ஆர்ஜித சட்டத்தின்படி சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் மூலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

**13. திரு. வேலுச்சாமி, விவசாயி, அவினாசி**

அவினாசியில் ஏற்கனவே உள்ள தேசிய நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்வதற்கு உதவிய மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் நன்றி. நில இழப்பீட்டிற்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவேண்டும். அதற்குண்டான அதிகப்படியான விலை நிர்ணயம் செய்யும் பட்சத்தில் அதிகப்படியான விவசாய நிலங்களை விட்டு விடுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அவினாசி புறவழிச்சாலை வடபுறமாக அமைக்கும்பட்சத்தில் முக்கிய தடங்களில் உள்ள வழிச்சாலைகள் புறவழிச்சாலையில் இணைய வாய்ப்புள்ளது. ஆனால், அவினாசி தெற்குப்புறமாக புறவழிச்சாலை அமைக்கும் பட்சத்தில் திருப்பூர் வழித்தடம் மட்டுமே இணைய வாய்ப்புள்ளது.

மேற்படி பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தபின் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் இக்கூட்டத்தில் கொடுக்கப்பட்டள்ள கருத்துக் கணிப்பு படிவத்தில் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை எழுத்துப் பூர்வமாக தெரிவிக்கலாம் என்று கூறினார். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி 26 பொதுமக்கள் தங்களது கருத்துக்களை மேற்கண்ட படிவத்தில் எழுத்துப் பூர்வமாக தெரிவித்தனர்.

இறுதியில் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அனைத்து பொதுமக்களின் கருத்துகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதை விளக்கி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும்

நன்றி கூறினார். இதைத் தொடர்ந்து திட்ட இயக்குனர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களும் நன்றி கூற பொதுமக்களின் கருத்து கேட்டுணரும் கூட்டம் மதியம் 1.00 மணிக்கு நிறைவு பெற்றது.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு (CD) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் கலந்து கொண்ட 222 நபர்களின் வருகைப்பதிவும் பிற்சேர்க்கை 1-ல் இணைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துகளுக்கு திட்ட பொறுப்பாளர்கள் கொடுத்த விளக்கங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பிற்சேர்க்கை-2ல் இணைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில்
பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஒம்....... | ஒம்....... | ஒம்....... |
| மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் | மாவட்ட வருவாய் அலுவலர் | மாவட்ட ஆட்சியர் |
| தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் | திருப்பூர் மாவட்டம் | திருப்பூர் மாவட்டம் |

//உண்மை நகல்//

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர்

# TAMILNADU POLLUTION CONTROL BOARD

## PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE 4/6 LANING OF THE NATIONAL HIGHWAYS-47 PROJECT FROM CHENGAPALLI (Km 100 + 000) TO WALAYAR (Km 182 + 400)

| | | |
|---|---|---|
| Name of the Project | : | 4/6 laning of the national highways-47 project from chengapalli (km 100 + 000) to walayar (km 182 + 400) |
| Place of Public Hearing | : | Sri Avinashiappar Thirumana Mandapam 18-A, Kovai Main Road, Avinashi. |
| Date and Time | : | 02.02.2010 at 11.00 a.m. |

PRESENT:

| | | |
|---|---|---|
| 1. Thiru.K.V. Muralidharan | : | District Revenue Officer<br>Tiruppur District, Tiruppur |
| 2. Thiru.R. Kannan | : | District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Tiruppur |
| 3. Thiru.P. Muthuramalingam | : | Tahsildar<br>Avinashi Taluk |
| 4. Thiru.P. Kamaraj | : | Deputy Superintendent of Police<br>Avinashi. |

Project Proponents:

| | | |
|---|---|---|
| 1. Thiru. P. Manivannan | : | Project Director<br>National Highways Authority of India<br>Coimbatore |
| 2. Thiru. V. Govindaragavan | : | Land Acquisition Officer<br>National Highways Authority of India<br>Coimbatore |

No. of public participated in the Public Hearing were 222. The attendance of the public who attended public hearing is enclosed in Annexure-I.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruppur welcomed the District Revenue officer, Tiruppur, Project Director, National Highways Authourity of India, Coimbatore and the public participated in the meeting and explained about the proposed 4/6 laning of National Highways 47 from Chengapalli to Walayar as follows:

National Highways Authourity of India has furnished draft Environmental Impact Assessment Report comprsising of the Potential Environmental Impacts and the mitigation of Impacts and Environmental Management Plan. A Public Hearing has already been conducted on 30.12.09 at Sulur for the same project related to the Coimbatore District jurisdiction. At present the Public Hearing is conducted for the proposed 4/6 laning of National Highways 47 in Tiruppur District (jurisdiction Chengapalli to Kittampalayam). The details of the project was explained by M/s. Wilbur Smith Associates, Consultant of the project, then public can express their views. Apart from this, the public can also furnish their opinion in the opinion sheet given to them.

The proceedings will be recorded in the compact disc and submitted to the Ministry of Environment and Forests, New Delhi along with the photographs and the Minutes of the Proceedings for necessary action.

The District Revenue Officer has welcomed the District environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruppur, Project Director, National Highways Authority of India, Coimbatore and the public. Then he invited the Project Director, National Highways Authority of India, Coimbatore to give a detailed report on the proposed project and then the public can express their views.

On behalf of Project Tmt. R. Kanmani, Senior Planner of M/s. Wilbur Smith Associates, the Consultant of the project has presented detailed project work.

The present project of 4/6 laning of National Highways 47 from Chengapalli to Walayar is a part of expansion project of National Highways 47 from Salem to Kanyakumari. The National Highways is an important Highway connecting Kerala State and Tamilnadu. The proposed 4/6 laning comprising of sections, (1) From Chengapalli to L&T Bypass StartingPoint (2) L&T By Pass Starting Point to L&T By Pass finishing point (3) L&T Bypass finishing point to Walayar.

The 4/6 laning of National Highway 47 is proposed to avoid the vehicle traffic and to improve the present Highway road. The proposed 4/6 laning is planned for a vehicle speed of 100 k.m. per hour. The present requirement for the Highway is 4 laning only. However, considering the vehicle accidents and vehicle traffic, 6 laning is proposed. In the proposed 4/6 laning, necessary safety measures has been carried out so as to avoid the accident and vehicle traffic conjestion as per the standards of National Highways Authority of India.

There are 3 Bypass in the proposed project. Out of which, 2 bypass are located at Avinashi and Perumanallur in the jurisdiction of Tiruppur District. Service Roads will be provided all along the 82 km length of the project. The proposed bypass length at Avinashi and Perumanallur in Tiruppur District is not much longer than the existing Highways. There is no impact on villages in Perumanallur bypass. The Avinashi bypass on the southern side of the town is more feasible than on the northern side. The road junction will also be improved.

The impact on the soil and ground water on the proposed project is studied. In the study report it is observed that the ground water quality and noise pollution levels are within the standards except at Perumanallur. The Ambient Air Quality survey conducted for the proposed project is within the standards. Necessary action will be taken so as to avoid the pollution. There is no Wild life sanctuary/Religious important place located along the proposed Highway project. However, necessary alternative measures will be provided on the acceptance of the public if any damage occurred while carrying out the project. The total project cost is about Rs.1000 crores. 1300 trees will be cut in Tiruppur District Jurisdiction. Instead, three trees will be planted for every trees cut along the road side and short trees, scrubs and flowering plants will be planted on the centre median of this project.

Then the District Environmental Engineer, Tiruppur has invited the public to express their views.

**PUBLIC OPINION**:

In the public hearing 13 persons have expressed their opinion as given below: The explanation given by the Project Director, National Highways Authority of India, Coimbatore is also furnished:

**1. Thiru.Arumugam, Palangarai:**

Sewage, drainage and rivers are crossing the project area near Palangarai. Hence necessary alternative measures should be carried out for the drainage and river passage. Agriculture land should be acquired for a project. Electrical post, drinking water supply pipelines will be affected by the project. Other than this there is no chance of pollution in the project.

<u>Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore</u>

The related department has already been approached for the relocation of electrical post,drinking water and drainage pipeline and necessary action will be taken by the concerned department.

**2. Thiru. Saminathan, Velayuthampalayam**

He has requested to explain the safety aspects due to the cut road and the joint road in the project.

<u>Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore</u>

All along the both sides of the project road, 7 m width service road will be provided so as to ensure the safety aspects.

**3. Thiru. Ambalavanan, Secretary, Commercial Trade Association, Avinashi.**

A discussion has already been carried out by the public and it was decided to lay the bypass on the northern side of the Avinashi instead of on the southern side. But, in the project bypass is planned on the southern side of Avinashi. Hence, necessary action to be taken to change the bypass from southern side to northern side in Avinashi Town.

<u>Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore</u>

In the public meeting already held we have a part of the public have opinioned of laying the bypass on southern side, a part of the public have opinioned of laying the bypass on northern side and a part of the public have opinioned to expand the existing National Highways itself in Avinashi. On considering the cost, road junction and traffic intensity and the above views of the public it was decided by the Highways Authority that the laying of bypass on the southern side of Avinashi is more feasible.

**4. Thiru.Saminathan, Secretary, Diravida Munnetra Kazhagam, Avinashi Panchayat Union.**

The bypass in Avinashi was earlier decided by the public on the northern side of Avinashi. But, how it was changed to southern side of Avinashi. The Length of the bypass while laying on the southern side will be more. Hence, the Hon'ble MInister of Highways, Tamilnadu as instructed to measure the actual length of the bypass. The bypass length of 12.5 km if laid on southern side of Avinashi as told by the Highways Department is not correct. In the earlier public meeting conducted, about 95 % of the public have expressed their opinion of laying the

bypass on the northern side of Avinashi only. The opinion of the MLAs and the Minister has not been obtained for the present project.

The District Environmental Engineer has replied that the earlier public meeting has been conducted by the Highways Department. But the present public hearing is being conducted so as to obtain the views of the public on Environmental related issues only so as to obtain Environmental Clearance for the project. And the public hearing is being conducted as per the Environmental Impact Assessment Notification, 2006 .

<u>Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore</u>

Laying of bypass in Avinashi was already discussed with the honourable Minister for Highways, Tamilnadu, Former Minister for Highways, Central Government and the Project consultant M/s. Wilbur Smith Associates and obtained the approval for laying the bypass in Avinashi on the southern side. However, the possibilities of providing bypass in Avinashi was analysed in various ways and it was decided by the Highways Authority to lay the bypass in Avinashi on the southern side is of more feasible.

**5. Thiru.R. Balasubramaniam, Kaikattipudur**

Lot of accidents occur in the existing National Highways. Present project completion will take about two years. Hence in the mean time necessary action should be taken to reduce the accident in the existing National Highways-47.

<u>Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore</u>

Necessay safety aspects will be carried out to avoid the accidents in the existing National Highways-47 and we will also extend our help.

**6. Thiru. Senthilkumar, President, Palangarai Panchayat:**

More amount to be given in excess of the market value fixed by the Government for compensation of land acquired.

<u>Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore</u>

The Special District Revenue Officer to be appointed as per the Land Acquisition Act 1956 will arrive at the compensation amount for land acquisition according to the present market value of the land. Hence, the public can approach the Special District Revenue Officer for knowing/obtaining compensation amount for the land acquisition. Those who have not agreed with the compensation amount shall appeal before the Arbitrator as per the Land Acquisition Act, 1956. If it also not agreed by the public again they can approach the Hon'ble High Court for their relief.

**7. Thru. Shanmugam, Communist Party, Avinashi Panchayat Union:**

The completion of the expansion of Highways project will take about 4 years. Traffic intensity is more in the existing National Highways-47 in Avinashi. No permission has been obtained from the Police Department for cutting the trees so as to expand the existing National Highways in Avinashi.

<u>Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore</u>

Necessary permission has been requested to the Police Department. After obtaining necessary details, the permission will be given by the Police Department.

**8. Thiru. R. Palanisamy, Communist Party, Avinashi**

He requested to explain whether the width of the service road will be included within the 60 m width of the proposed expansion project. More compensation has to be given for land acquisition and a fly over to be provided in Avinashi.

Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore

7 m Width of the service road which is included in the total width of 60 m wide expansion project will be provided.

**9. Thiru. Rajagopal, Farmer, Thekkalur**

The present Highway expansion project would have been completed 10 years before itself. Necessary improvement measures and facilities to be provided in the present expansion project has provided in Bombay like areas. Agricultural land will be affected by the project. If a bypass is provided on the northern side of the Avinashi, the villages located on the northern side will be developed. If a bypass is provided on the southern side of Avinashi, the agricultural land located in the southern side will be affected. The advertisement Boards installed along the road side in Avinashi has to be removed. The agricultural land is acquired more on one side from a particular area. Necessary compensations amount to be given for the land acquisition.

**10. V.K. Chandramurthy, Marumazharchi Diravida Munnetra Kazhagam Perumanallur Panchayat Union:**

It is better to improve and expand the existing National Highways in Perumanallur instead of providing a bypass. The length of the bypass in Perumanallur will be more. About 250 houses and 80 acres of agricultural lands will be affected in the bypass. Since, adequate government poramboke lands are available along the existing National Highways in Perumanallur, the existing Highway shall be expanded. Public are also not aware of the present project.

Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore

The distance of existing National Highway -47 in Perumanallur is 4.2k.m. The distance of the bypass in Perumanallur will be 4.7k.m. Hence, there is no major difference in the distances. The government also will not approve, if the distance of bypass is more than the existing National Highway. However, the geomentry of existing road is not feasible for carrying out any expansion.

The District Environmental Engineer, Tiruppur has also explained that a public notice has been issued on 25.12.2009 in the leading Tamil and English newspapers regarding the present public hearing for the proposed 4/6 laning of National Highways-47.

**11. Thiru.Radhakrishnan, AITUC**

The compensation for the land acquisition should be released immediately. The trades will be affected if bypass is provided in Perumanallur. Hence, preferences to be given to the affected shop keepers in the existing National Highway in Perumanallur. More compensation was given for land acquisition in the similar project in North India. Similarly, more compensation should be given to the present projects.

**12. Thiru. Shanmugam, Kaikattipudur and Tmt. Kavitha:**

There is no much pollution related issues in the Highways expansion projects. Land acquisition and compensation is more important in these kinds of projects. Hence more compensation has to be given for the land acquisition.

Explanation of Project Director, National Highways Authority of India, Coimbatore

A separate meeting will be conducted for giving more compensation for land acquisition. However, the affected persons shall approach through proper procedure for obtaining more compensation for land acquisition. The compensation amount will be decided by the Special District Revenue Officer appointed as per Land Acquisition Act.

**13. Thiru. Velusamy, Farmer, Avinashi**

He thanked to the District Collector, District Revenue Officer and Police officials for extending their help in the expansion of existing National Highways in Avinashi. Necessary compensations has to be given for land acquisition. If more compensation is given for land acquisition, more agricultural land will be sold out and it will affect the agriculture. There is a possibility of joining the important roads while laying bypass on northern side of Avinashi. Only Tiruppur road is connected while laying the bypass on southern side of Avinashi.

Then the District Environmental Engineer has invited the public to give their further views in the opinion sheet furnished to them. Subsequently 26 persons have furnished their views in the opinion sheet.

Finally, the District Environmental Engineeer has informed about the recording of the present public hearing proceedings. Then the public hearing came to an end at 1.00 p.m. after the vote of thanks by the Project Director, National Highways Authority of India, Coimbatore.

The soft copy of the video recording of the public hearing proceedings is enclosed in the form of compact disc.

The attendance of the 222 public participated in the public hearing is enclosed in Annexure-I.

A statement of the issues raised by the public during public hearing and comments of the project proponent in Tamil and in English is enclosed in Annexure-II.

The public hearing proceedings are recorded.

| Sd….. | Sd….. | Sd….. |
|---|---|---|
| District Environmental Engineer | District Revenue Officer | District Collector |
| TNPC Board, Tiruppur District | Tiruppur District | Tiruppur |

// True copy //

District Environmental Engineer
TNPC Board, Tiruppur